மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# சிற்றிலக்கியத்தில் மெய்ப்பாட்டியல்
# Meipaadu in Sitrilakkiyam

R. Pannirukai Vadivelan / இரா. பன்னிருகைவடிவேலன்[1]
Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மணி தேவி அண்ணாமலை[2]
S. Vijalakshmi / ச. விஜயலட்சுமி[3]

[1]பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 600 117

[2]இணைப்பேராசிரியர், சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.

[3]முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 600 117

Date of Submission: 14-09-2025
Date of Acceptance: 23-10-2025
Date of Publication: 25-12-2025
Corresponding Author's Email:
manonmanidevi@fbk.upsi.edu.my

**ஆய்வுச் சுருக்கம்**

இக்கட்டுரை தமிழ் சிற்றிலக்கியங்களில் வெளிப்படும் பல்வேறு மெய்ப்பாடுகளை (உணர்ச்சிகளின் உடல்சார் வெளிப்பாடுகள்) ஆராய்கிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாட்டியல் கோட்பாடுகளின் அடிப்படையில், சிற்றிலக்கியங்கள் எவ்வாறு மனித உணர்வுகளைப் பதிவு செய்துள்ளன என்பதை இது விளக்குகிறது. குறிப்பாக, பக்தி இலக்கியங்களில் வெளிப்படும் இறைக்காதல் மற்றும் சரணாகதி உணர்வுகள், பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் பிரதிபலிக்கும் கனிவான தாய்மை உணர்வுகள், மற்றும் பரணி இலக்கியங்களில் விவரிக்கப்படும் வீரம், அச்சம், அவலம் போன்ற போர்க்கள மெய்ப்பாடுகள் குறித்து இக்கட்டுரை விரிவாக எடுத்துரைக்கிறது. திருக்கைலாய ஞான உலா, பெரியாழ்வார் திருமொழி, கலிங்கத்துப் பரணி போன்ற இலக்கியச் சான்றுகளின் வழி, சிற்றிலக்கியங்கள் வெறும் சொற்களஞ்சியமாக மட்டுமன்றி, மானுட உணர்ச்சிகளின் உயிரோட்டமான கருவூலமாகத் திகழ்வதை இவ்வாய்வு உறுதி செய்கிறது.

**Abstract**

This paper explores the manifestation of Meippadu—the physical expression of internal emotions—within the genre of Tamil Minor Literature (Sittrilakkiyam). Drawing upon the aesthetic theories established by Tholkappiyar, the study analyzes how various emotional states are artistically rendered in these literary works. The research focuses on several key dimensions: the expression of divine love and surrender in Devotional Literature (e.g., Thirukailaya Gnana Ula); the tender nuances of maternal affection portrayed in Pillaithamil (e.g., Periyazhwar Thirumozhi); and the intense depictions of heroism (Veeram), fear, and pathos in war-centric literature like Parani (e.g., Kalingathu Parani). By examining these texts, the article demonstrates that Sittrilakkiyam serves as a vital repository of human emotions, bridging the gap between internal feelings and external physical manifestations, thereby ensuring the timeless relevance and vitality of these literary forms.

**முன்னுரை**

பேச்சு மொழியின் தோற்றத்துக்கு முன்பே மனிதன் தன் உள்ளத்து உணர்ச்சிகளை உடல் அசைவுகளால் வெளிப்படுத்தினான். உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடாக, உடல் மேல் தோன்றும் புறக் குறிகளே மெய்ப்பாடுகள் ஆகும். செய்யுளுக்குரிய உறுப்புக்களுள் இன்றியமையாதது மெய்ப்பாடு. புலவர்கள் தாம் படைக்கும் செய்யுள்களில் மாந்தர்களின் உணர்ச்சிகளைக் குறிக்காது உணர்ச்சிகளால் அவர்கள் அடையும் மெய்ப்பாடுகளையே குறித்தனர். இதனால் செய்யுளைப் படிப்போர் அம்மாந்தர்களின் மேம்பாட்டை அறிந்து அவர்களின் உணர்ச்சியோடு ஒன்றுவது எளிதாகிறது. சிற்றிலக்கியங்களில் அமைந்துள்ள இத்தகைய மெய்ப்பாடுகளின் தன்மை குறித்து ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

மெய்ப்பாடு குறித்துத் தொல்காப்பியர்,

**"உய்த்துணர் வின்றி தலைவரு பொருண்மையின்**

**மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடாகும்". (தொல். பொருள். செய்.3)**

என்கிறார். அதாவது உய்த்து உணர்வதால் அன்றி இயல்பாகவே வெளிப்படும் உணர்ச்சிகளைச் செய்யுளில் புலப்படக் கூறுவது மெய்ப்பாடு என்கிறார். "மெய்யின் கண் தோன்றுதலின் மெய்ப்பாடு ஆயிற்று" (தொல். செய்.3, ப.31) என்பர் இளம்பூரணர். பேராசிரியர் "பொருள் உள்நிகழும் உணர்ச்சி வெளிப்படுத்தல் மெய்ப்பாடு " (தொல். பொருள். செய்1, ப.40) எனப் பெயர் பெறும் என்பார். "மெய்ப்பாடு என்பது அக உணர்வுகளை ஆழ்ந்து ஆராயாமலேயே யாரும் இனிதறிய புலப்படுத்தும் இயற் புற உடற்குறியாம் என்று கூறுகிறார், சா. சோமசுந்தர பாரதியார் (தொல்காப்பியம் பொருள் படலப் புத்துரை, ப.18). இந்த மெய்ப்பாட்டினை எட்டு என்றும், உணர்வுகள் 32 என்றும், அவை சுவை பொருந்த புலப்படும் மெய்க்குறியால் நான்கு நான்காகத் தொகுத்து எண்ணப் பெறும் என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இக்கருத்திற்கு "உள்ளுணர்வுகளின் தொகுதியாகத் தோன்றும் அனுபவங்களின் அடிப்படையில் எழும் 32 உணர்ச்சிகளும் முறையே நான்கு நான்காகத் தொகுத்துக் காணின், எட்டு வகை மெய்ப்பாட்டுக்கும் காரணமாக அமையும்" (இலக்கியத் திறனாய்வியல், ப. 93) என்று தா.ஏ. ஞான மூர்த்தி கூறும் விளக்கம் அரணாக அமைகிறது.

மெய்ப்பாட்டைக் குறிக்க சுவை என்ற சொல்லைத் தொல்காப்பிய உரை ஆசிரியர்கள் பயன்படுத்தியுள்ளனர். அடியார்க்கு நல்லாரும் சுவை என்றே மெய்ப்பாட்டைக் குறிப்பிடுகின்றார். வடமொழியாளர் கூறும் இரசத்தின் தமிழாக்கமான சுவை என்னும் சொல்லால் மெய்ப்பாட்டைக் குறிப்பிடுவதால், இரசமும் மெய்ப்பாடும் ஒப்புமை உடையதாகக் கருதப்படுகிறது.

அவை,

**சிருங்காரம் (Erotic) - உவகை**

**வீரம் (Haroic) - பெருமிதம்**

**கருணை (Pathetic) - அழுகை**

**ஹாஸ்யம் - (Comic) - நகை**

**உருத்திரம் - (Farovious) - வெகுளி**

**பயானகம் - (Fearful) - அச்சம்**

**பீபற்சம் - (Papulsive) - இளிவரல்**

**அற்புதம் (Wonderful) - மருட்கை**

இவ்வொப்புமை பெயரொற்றுமையே. இந்த ஒப்புமையானது, “கருத்தளவில் முழுதும் பொருந்தும் எனக் கூறல் இயலாது” (தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.214) என்பார் சுப்புரெட்டியார்.

சிற்றிலக்கியங்கள்

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களில் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது சிற்றிலக்கியமாகும். தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்திலேயே சிற்றிலக்கியத்திற்கான குறிப்புக் காணப்பட்டாலும், நாயக்கர்கள் காலத்தில்தான் சிற்றிலக்கிய வகைமைகள் மிகுதியாகப் பெருகின. சிற்றிலக்கியங்கள் பொதுவாக 96 வகைப்படும் என்பர். உலா, தூது, கலம்பகம், பரணி, அம்மானை முதலானவை அவற்றுள் சில. இத்தகு இலக்கிய வகைமைகளில் வெளிப்படும் மெய்ப்பாடுகள் சிலவற்றைக் காண்போம்.

**பக்தி உணர்வுகள்**

கடவுள் மீது பாடப்படுவனவாகத் தூது, பிள்ளைத்தமிழ், உலா, இரட்டைமணிமாலை, கலம்பகம், கோவை முதலான பல சிற்றிலக்கியங்கள் அமைந்துள்ளன. இவற்றில் கடவுளைத் தலைவனாகவும், குழந்தையாகவும், இறைவனாகவும் கருதி பிரிவுத்துன்பம், ஆழ்ந்த பக்தி உணர்வுகள் முதலியன மெய்ப்பாடாக வெளிப்படுகின்றன.

சான்றாக, உலா இலக்கியங்களில் கடவுள் மீதான பக்தி பெண்களின் காதல் உணர்வுகளுடன் வெளிப்படுத்தப்படுகிறது. இது பக்தியை ஒரு புதிய கோணத்தில் காட்டும். சேரமான் பெருமாள் நாயனார் பாடிய திருக்கைலாய ஞான உலாவானது சிவபெருமானின் திருவுலாவைக் காணும் மகளிரின் காதலையும் பக்தியையும் புலப்படுத்துகிறது.

**“தேவாதி தேவன் சிவனாயின்**

**தேன் கொன்றைப்**

**பூவார் அலங்கல் அருளாது. போவானேல்**

**கண்டால் அறிவன் எனச் சொல்லிக்**

**கைசோர்ந்து**

**வண்டார்பூங் கோதை வளந்தோற்றாள்” (தி.உ.170-171)**

என்ற வரிகளில் சிவபெருமான் அவனே வலிய வந்து கொன்றை மாலையை எனக்கு அருள்வான். அவ்வாறு அருளாது அப்பாற்போய்விடில் எனது நாணும் வலிமையும் அழகும் ஒழியட்டும் என்று செயலற்றவளாக வருந்தி, தன் பெண்மை நலத்தை எல்லாம் இழந்துவிட்டதாகக் கூறுகிறார். இதன் மூலம் பெருமான் மீது சேரமான் கொண்ட ஆழ்ந்த காதலும், பக்தியும் ஒருங்கே காணமுடிகிறது.

இவ்வாறே திருவாரூர் மும்மணிக் கோவையிலும், தலைவனைச் சேராது இருக்கும் தலைவியின் விரகவேதனைக் குறிப்புகள், இறைவனைச் சார விரும்பும் அடியாரது உளப்பாங்கையும் நிலையையும் குறிப்பாக வெளிப்படுத்துகின்றன.

**”கலைபிணை திரியக் கையற வெய்தி**

**மெல்விரல் நெரித்து விம்மி வெய்துயிர்த்து**

**அல்லியங் கோதை அழலுற் றாஅங்கு**

**எல்லையில் இருந்துயர் எய்தினள்” (ஆரூர் மும்மணிக்கோவை, 7)**

என்னும் பாடலில் அணிந்த உடை கட்டவிழ, தன் மெல்லிய விரல்களை நெரித்து, ஏங்கி, நெடிய பெருமூச்சிட்டு, பூமாலை ஒன்று தீயில் வாடுவது போலத் துயருற்றாள் எனத் தலைவியின் துயரம் நிறைந்த மனநிலை விளக்கப்படுகிறது. இந்நிலை, இறைவனைச் சேர எண்ணும் அடியவருக்கும் அமைதல் வேண்டும், என்னும் பக்திப் பெருநெறி இங்கு விளக்கப் பெறுதல் அறியலாம்.

இறைவனிடம் பக்தி கொண்டவர், இரக்க நெஞ்சினராகவும், அற உணர்வு மிக்கவராகவும் விளங்குவதைக் காணலாம், இறைவனைக் காணும் போது வெளிப்படும் பேரின்ப உணர்வு நிலையையும் இச்சிற்றிலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

**“எனக்கினிய எம்மானை ஈசனை என்றும்**

**கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்**

**உண்டோ எனக்கரிய தொன்று” (அற்புத.17)**

என்று இன்பமடைகிறார் காரைக்காலம்மையார்.

ஆண்டாளின் திருப்பாவை-இறைவனை மணாளனாகக் கருதி ஆண்டாள் வெளிப்படுத்திய ஆழ்ந்த பக்தி உணர்வைக் காட்டுகிறது.

இவை போன்று முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ், குமரேச சதகம், இரட்டைமணி மாலை, அழகரந்தாதி முதலான பல சிற்றிலக்கியங்கள் பக்திச் சுவை மிகுந்து, என்றும் அழியாச் சிறப்புடையனவாக மனத்தில் நிற்கின்றன.

### தாய்மை உணர்வுகள்

தாய்மை உணர்ச்சி என்பது ஒரு தாய்க்கும் அவரது குழந்தைக்குமான ஆழ்ந்த உள்ளார்ந்த உணர்வு. இது மகிழ்ச்சி, அன்பு, பாதுகாப்பு, பொறுப்புணர்வு போன்ற பல உணர்ச்சிகளைக் கொண்டது. சிற்றிலக்கியங்களில் குறிப்பாகப் பிள்ளைத்தமிழ், அம்மானை முதலான வடிவங்களில் தாய்மையின் பாசம், கவலை, பாதுகாப்பு போன்ற உணர்வுகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளதைக் காணமுடிகிறது. பிள்ளைத் தமிழின் பத்து பருவங்களிலும் தாயின் வெவ்வேறு உணர்வு வெளிப்பாட்டைக் காணமுடிகிறது. சான்றாக ஒரு தாயின் மனநிலையை அப்படியே வெளிப்படுத்தியுள்ள பெரியாழ்வார் திருமொழி, மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், சேக்கீழார் பிள்ளைத்தமிழ், குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் முதலானவற்றைக் கூறலாம். பெரியாழ்வார் திருமொழியில் ஒரு தாயாகக் கண்ணனின் குறும்புகளைக் கண்டு இரசிக்கிறார்.

**பணித் தொழுவினில் புக்குப்**

**புழுதியளைந்த பொன்மேனி**

**காணப் பெரிதும் உகப்பன் ஆகிலும்**

**கண்டார் பழகிப்பர் (பெரியாழ். 2-9-4)**

என்று தன் உணர்வை வெளிப்படுத்துகிறார். இவர் கண்ணனை உணவு உண்ண அழைப்பது, நீராட அழைப்பதும் காணும் போது, யசோதையாகவே இவர் மாறி நிற்பதைக் காணமுடிகிறது.

**"வெண்ணெய்**

**எண்ணைய் புளிப்பழம் கொண்டு இங்கு**

**எத்தனை போதும் இருந்தேன்". (பெரியாழ். 151)**

கண்ணனின் குழந்தைக் குணங்களோடும் பருவக் குறும்புகளோடும் தாயாகக் கலந்து நிற்கும் பெரியாழ்வார் தாய்க்குரிய அன்பை, கருணையை, இரக்கத்தை, கண்டிப்பை மிக ஆழமான உணர்வுத் தளத்தில் தாயாகவே மாறிப் பேசுகிறார்.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் வருகைப் பருவத்தில் குமரகுருபரர் மீனாட்சியை அழைக்கும் போது,

**"பிறவிப் பெரும் பிணிக்கு ஓர்**

**மருந்தே வருக பசுங்குதலை**

**மழலைக் கிளியே வருகவே**

**மலயத்துவசன் பெற்ற பெரு**

**வாழ்வே வருக வருகவே! (மீனா. பிள். 62)**

என்றவாறு தாய்மை உணர்வு பொங்க அழைப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு பிள்ளைத் தமிழின் ஒவ்வொரு பருவத்திலும், குழந்தை வளரும்போது தாய் அடையும் மகிழ்ச்சியும் பெருமையும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

### போரும் வீர உணர்வும்

சிற்றிலக்கியங்களில் போர் உணர்வும் வீர உணர்வும் பரவலாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, பரணி வகை சிற்றிலக்கியங்களில் போர் பற்றியும் போர் வீரர்களின் வீரதீரச் செயல்கள் பற்றியும் விரிவாகப் பேசப்படுகிறது. இதுதவிர, பிள்ளைத் தமிழ், குறவஞ்சி முதலான சிற்றிலக்கிய வகைமையிலும் போர் உணர்வும் வீர உணர்வும் ஆங்காங்கே வெளிப்படுத்தபட்டுள்ளன.

கலிங்கத்துப் பரணியில், வீரர்கள் வாயில் புகுந்த வேல்களோடு சாயாமல் அந்த வேல்களை வலக்கையால் பிடித்தபடி சாய்ந்து கிடந்த போர்க்களச் செய்தி கூறப்பட்டுள்ளது.

"வாயில் புகு வேல்கள் பற்று வலக்கையோடு

நிலத்திடைச் சாயும்" (கலி. பரணி. 499)

வீரர்கள் தம் மார்பில் பாய்ந்த வேல்களைப் பிடுங்கி நிலத்தில் ஊன்றி குருதியாற்றின் மேல் நின்ற காட்சியும் கூறப்பட்டுள்ளது. இதில் கருவியுடன் இறப்பதை இழிவெனக் கருதி, உடலிலிருந்து உருவி எடுத்த வீரச் சிறப்பு வெளிப்படுகிறது.

நெடுங் குந்தம் மார்பினின்றும் பறித்து (க.பரணி.500)

இத்தகைய போர்க்களக் காட்சிகளில் மட்டுமன்றி ஏறு தழுவும் நிகழ்வு குறித்த வீர உணர்வுகளும் சிற்றிலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. ஏறுதழுவுதல் பற்றிய குறிப்புகள் உள்ள சிற்றிலக்கிய வகை பள்ளு. 'எருதுகட்டி' என்னும் மாடு தழுவும் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது.

**அழுகை உணர்வும் பெருமிதமும்**

துக்கம், சோகம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் சில சிற்றிலக்கியங்கள் அமைந்துள்ளன. பரணி வகையினில், போர்க்களத்தே இறந்து கிடக்கும் வீரர்களைக் கண்டு சோகமும், துக்கமும், அழுகையும் வெளிப்படுவதோடு, பெருமை, வீரம் போன்ற உணர்வுகளும் வெளிப்படுகிறது.

கலிங்கத்துப் பரணியில் கணவனது உடலை நிலமகள் தாங்கும் முன் தன் கரத்தால் தாங்கியும், தெய்வப் பெண்கள் அவன் உயிரைத் தழுவும் முன் தன் உயிரையும் ஒருசேர விடும் மனைவியின் சோகக்காட்சி காட்டப்பட்டுள்ளது.

"தரை மகளும் தன் கொழுநன் உடலம் தன்னைத்

தாங்காமல் தன் கரத்தால் தாங்கி விண்ணாட்டு" (கலி.பரணி.484)

மற்றொரு காட்சியில், ஒரு மனைவி தன் கணவனைப் போர்க்களத்தில் தேடி வருகின்றாள். அவளுக்குக் கணவனின் தலை மட்டுமே கிடைக்கிறது. அவள் மற்ற வீரமிக்க உடல் உறுப்புகள் எங்கே, எங்கே என்று கேட்கிறாள்.

"பரு வயிரத் தோள் எங்கே, எங்கே

என்று பயிர வியைக் கேட்பாளை" (க.பரணி. 485)

இதன் மூலம் மனைவியின் துன்பமும் அதேநேரம், அவள் கணவன் மீது கொண்ட அதீத நம்பிக்கையும் பெருமித உணர்வும் வெளிப்படுவதைக் காணலாம்.

அச்சமும் அவல உணர்வும்

சிற்றிலக்கியங்களில் இத்தகைய அச்ச, அவல உணர்வுகளும் வெளிப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. கலிங்கத்துப் பரணியின் போர்க்களக் காட்சியில், வீரர்களின் உடம்பில் இருந்து பெருகிய குருதியானது கடல் போலக் காட்சி அளிப்பதாகவும், அதில் அலைகளாகக் குதிரைகளும், நுரைகளாகச் சாமரங்களும் மிதந்த காட்சி கூறப்பட்டுள்ளது.

"அமர் செய் கலிங்கர் தம் கவரி

வெண்நுரை நிரைத்து,

அவர் உடல் குருதியின் கடல் பரந்து ஓடுமா" (க. பரணி. 494)

இதில் அச்சமும், அவல உணர்வும் வெளிப்படுவதைக் காணலாம்.

**நிறைவுரை**

சிற்றிலக்கியங்கள் பல்வகை மெய்ப்பாடுகளை உடையனவாக விளங்குவதை இவ்வாய்வுக் கட்டுரைவழி உணரலாம். ஒவ்வொரு சிற்றிலக்கிய வகைமையும் சில உணர்வுகளை மிகுதியாக வெளிப்படுத்துகின்றன. சான்றாகப் பிள்ளைத்தமிழில் மிகுதியாகத் தாய்மை உணர்வும் அன்பும் வெளிப்படுத்தப் பட்டுள்ளதையும் பரணி இலக்கிய வகையில் மிகுதியாகப் போர்க்களக் காட்சிகளும் வீர உணர்வும் கடவுளைப் போற்றி எழுதப்படக்கூடிய சிற்றிலக்கிய வகையில் பக்தி உணர்வும் மிகுதியாக இடம்பெற்று உள்ளதைக் காண முடிகிறது. இவை தவிர பல்வேறு உணர்ச்சிகளும் இந்தச் சிற்றிலக்கியங்களில் அமைந்துள்ளதையும் இந்த ஆய்வு வழி அறிய முடிகிறது. எனவே, சிற்றிலக்கியங்கள் பல்வேறு மெய்ப்பாட்டு உணர்ச்சிகளோடு உயிரோட்டம் உடையதாக என்றும் நிலைத்து இன்பம் பயப்பதாக விளங்குகின்றன.

**துணைநூற்பட்டியல்**


குமரகுருபரர். (1866). மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ். தஞ்சாவூர்.

சண்முகம்பிள்ளை, மு. (பதி.). (2007). தொல்காப்பியம் (இளம்பூரணர் உரை). பாரி நிலையம்.

சிவபெருமான் (மூலம்), சேரமான் பெருமாணாயனார். (1936). திருக்கைலாய ஞான உலா. மாடல் அச்சுக்கூடம்.

சுப்பிரமணிய முதலியார், C. K. (உரை). (1950). திருவாரூர் மும்மணிக் கோவை. ஞானசம்பந்தப் பிரசுரம்.

சோமசுந்தர பாரதியார், ச. (1997). தொல்காப்பியம் பொருட்படலப் புத்துரை. வசுமதி பதிப்பகம்.

ஞானமூர்த்தி, தா. ஏ. (2011). இலக்கியத் திறனாய்வியல். ஐந்திணைப் பதிப்பகம்.

புலியூர்க்கேசிகன் (உரை). (2021). கலிங்கத்துப் பரணி: மூலமும் உரையும். சாரதா பதிப்பகம்.

பேராசிரியர் (உரை). (2018). தொல்காப்பியம். சாரதா பதிப்பகம்.

ஜகந்நாதன், கி. வா. (பதி.). (1985). அற்புதத் திருவந்தாதி. அமுதநிலையம்.

ஸ்ரீ நிவாசாசாரியார் சுவாமி, தி. (1936). பெரியாழ்வார் திருமொழி. ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ்.